வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 30.04.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது ஜாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மலேரியா கொசுக்களின் உற்பத்தியை தடுக்க, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மேல்நிலை தொட்டிகளை மூடி வைத்து பாதுகாக்க வேண்டும் என்று புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முதலாவது உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடு, வேவ்ஸ் -2025 மும்பையில் நாளை துவங்க உள்ளது.

அரசின் தொலைநோக்கு திட்டங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மாணவர்கள் செயல்பட வேண்டும் என்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

*அமைச்சரவை கூட்டம் 1*(5)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெற்றது. இன்றைய கூட்டம் பஹல்காம் தீவிரவாத

தாக்குதலுக்கு பிறகு நடைபெறும் முதலாவது அமைச்சரவை கூட்டமாகும். அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு, மத்திய தகவல்-ஒலிபரப்பு துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று மதியம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர்,

(வாய்ஸ்)

*அமைச்சரவை கூட்டம் வாய்ஸ்*(17)

வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது ஜாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு நடைபெறும் என்று அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசு தொடர்பானது என்றும், சில மாநிலங்கள் ஜாதி அடிப்படையிலான கணக்கெடுப்பை நல்ல முறையிலும், வேறு சில மாநிலங்கள் அரசியல் நோக்கத்தோடும் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். வடகிழக்கு பிராந்தியங்களின் மேம்பாட்டிற்காக 22 ஆயிரத்து 864 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள

ஷிலாங் முதல் சில்சார் வரையிலான புதிய நெடுஞ்சாலை திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளதாகவும் திரு வைஷ்ணவ் தெரிவித்தார். 2025-26 சர்க்கரை பருவத்தில் குவிண்டால் ஒன்றுக்கு 355 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்க அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதனால் 5 கோடி கரும்பு விவசாயிகளும், சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் 5 லட்சம் தொழிலாளர்களும் மற்றும் அதனை சார்ந்த தொழில புரிவோரும் பயனடைவர் என்று அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

*பிரதமர் பயணம்* (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை மகராஷ்டிரா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களுக்கு செல்ல உள்ளார். நாளை மும்பையில் துவங்க உள்ள உலக ஒலி-ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடான, வேவ்ஸ் உச்சி மாநாட்டை துவக்கி வைக்கும் பிரதமர், நாளை மறுநாள் கேரள மாநிலத்தில் விழிஞ்சம் சர்வதேச ஆழ்கடல் பல்நோக்கு துறைமுகத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். பின்னர் ஆந்திரமாநிலம் அமராவதியில் 58 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களையும் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். 7 தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள், சாலை பாதுகாப்பு, திருப்பதி, ஸ்ரீகாளஹஸ்தி, மலக்கொண்டா மற்றும் உதயகிரி கோட்டை உள்ளிட்ட இடங்களுக்கான ஆன்மீக மற்றும் சுற்றுலா தலங்களை இணைக்கும் திட்டம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

*சர் தாம் பயணம்* (6)

அக்ஷய திரிதியை-யை முன்னிட்டு உத்திரகாண்ட் மாநிலத்தில் இன்று சர் தாம் யாத்திரை துவங்கி உள்ளது. சர் தாம் யாத்திரையை முன்னிட்டு உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி கோவில் நடைகள் சமய சடங்குகள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்க  திறக்கப் பட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் கங்கோத்ரி மற்றும் யமுனோத்திரி ஆலய தரிசனத்திற்காக உத்தரகாசி வந்துள்ளனர்.

*பசவ ஜெயந்தி* (14)

பசவ ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது. 12 ஆம் நூற்றாண்டின் கவிஞர், தத்துவஞானி மற்றும் சமூக சீர்திருத்தவாதியான கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஜகத்குரு பசவேஸ்வரா என்பவரின் பிறந்த தினம் பசவ ஜெயந்தியாக கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம் மற்றும் தெலங்கானாவில் கொண்டாடப்படுகிறது. பசவ ஜெயந்தியை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி, அன்னாரின் ஆழ்ந்த ஞானம் குறித்து நினைவு கூர்ந்துள்ளார். பசவேஸ்வராவின் சமூகம் சார்ந்த பார்வை மற்றும் விளிம்பு நிலை மக்கள் மேம்பாட்டிற்கான அவரது தொய்வில்லா முயற்சிகள் என்றென்றும் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் மத்திய அமைச்சர்கள் திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு கிரண் ரிஜிஜூ, திரு பிரல்ஹாத் ஜோஷி, திருமதி ஷோபா கரந்த்லாஜே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு தேஜஸ்வி சூர்யா உள்ளிட்டோர் ஜகத்குரு பசுவேஸ்வராவிற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

மலேரியா தினம் (16)

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் மலேரியா ஒழிப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன ஊர்வலம் நடைபெற்றது. மலேரியா நம்மோடு முடியட்டும் என்ற கருப்பொருள் அடிப்படையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கொடியசைத்து ஊர்வலத்தை தொடக்கி வைத்தார். தேசிய சுகாதார இயக்க இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜ், குடும்ப நல துணை இயக்குநர் டாக்டர் அனந்தலட்சுமி, ஐஇசி துணை இயக்குநர் டாக்டர் ஜி ரகுநாத், மலேரியா திட்ட உதவி இயக்குநர் டாக்டர் ஆர் வசந்தகுமாரி, சுகாதார உதவியாளர்கள், ஆய்வாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் துவக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பேசிய சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன், பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மேல்நிலை மற்றும் கீழ்நிலை தொட்டிகளை கொசு புகா வண்ணம் மூடி வைத்து பாதுகாக்க வேண்டும் என்றும், கிணறு இருந்தால் அவைகளை வலையிட்டு பாதுகாத்து மலேரியா நோயை பரப்பும் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வேவ்ஸ் (8)

முதலாவது உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடு வேவ்ஸ் 2025 மும்பையில் உள்ள ஜியோ உலக மாநாட்டு அரங்கில் நாளை துவங்க உள்ளது. மே 1 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த உச்சி மாநட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை துவக்கி வைக்க உள்ளார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

வேவ்ஸ் வாய்ஸ் (14)

ஒலி-ஒளி மற்றும் பொழுதுபோக்கு துறைக்கான எதிர்கால திட்டங்கள் குறித்த உலகளாவிய விவாதத்திற்கான மேடையாக இந்த வேவ்ஸ் உச்சி மாநாடு அமையும். இந்த 4 நாள் உச்சி மாநாடு, உலககெங்கிலும் உள்ள படைப்பாளர்கள், நிறுவன தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்களை இந்தியாவுடன் இணைத்து, இந்தியாவை ஊடக, பொழுது போக்கு மற்றும் டிஜிட்டல் புத்தாக்க உலகளாவிய மையமாக மாற்றும். பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கமான படைப்பாற்றல், தொழில்நுட்பம் மற்றும் ஒளிமயமான எதிர்காலத்தை வடிவடைக்கும் விதத்தில் இந்த வேவ்ஸ் உச்சி மாநாட்டில் திரைப்படங்கள், ஓடிடி, கேமிங், காமிக்ஸ், டிஜிட்டல் மீடியா தொடர்பான நிகழ்வுகளும், உலகளாவிய ஊடக உரையாடல்கள், வாங்குவோர்-விற்போர் சந்திப்புகள், வளர்ந்து வரும் படைப்பாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இந்த மாநாட்டின் போது அரங்கேறும். வேவ்ஸ் முதல் உச்சி மாநாடு இந்தியாவால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

*ஆண்டு விழா காரைக்கால்* (17)

காரைக்கால் டாக்டர் கலைஞர் மு கருணாநிதி பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 5 ஆம் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா இன்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ், காரைக்கால் துறைமுகத்தின் தலைமை இயக்க அதிகாரி கேப்டன் சச்சின் ஸ்ரீவத்சவா, கல்லூரி முதல்வர் முனைவர் முகமது ஆசாத் ராசா உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். மாணவ-மாணவிகள், கல்லூரிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் விழாவில் பேசினார். முதுகலை பயிலும் மாணவர்கள் ஆய்வு கட்டுரை, ஆராய்ச்சி கட்டுரைகளில் தங்களை இணைத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்றும், அரசின் தொலைநோக்கு திட்டங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பங்காற்றவும் மாணவர்கள் தயாராக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். விழாவில், கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கும், கலை மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 400 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ஐபிஎல்* (4)

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை-பஞ்சாப் அணிகள் களம் காண்கின்றன. நேற்றிரவு டெல்லியில் நடைபெற்ற ஆட்டத்தில், கொல்கத்தா அணி, டெல்லி அணியை 14 ரன் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

வானிலை (8)

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால் இன்றும் நாளையும், தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும், புதுச்சேரி-காரைக்காலின் சில பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று முதல் வரும் 2 ஆம் தேதி வரை, தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*அக்ஷய திரிதியை* (7)

அக்சய திரிதியை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திரமோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். மனித நேயத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த நன்னாள் அனைவருக்கும் வெற்றி, வளம் மற்றும் மகிழ்ச்சியை கொண்டு வரட்டும் என்று சமூக ஊடகப் பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். விக்சித் பாரத் கட்டமைப்பில் ஒருமித்த உறுதிப்பாடு மற்றும் வலிமையை உறுதி செய்யும் நாளாக இந்நாள் அமையட்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல் (12)

ஒரே நாடு – ஒரே தேர்தல் விழிப்புணர்வு ஓட்டம் டெல்லியில் நடைபெற்றது. புதுடெல்லியில் உள்ள டெல்லி பல்கலைக்கழகத்தில் இன்று காலை துவங்கிய இந்த ஓட்டத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகாகுப்தா ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். ஒரே நாடு – ஒரே தேர்தல் தற்போதைய தேவை என்று நிகழ்ச்சியின் போது குறிப்பிட்ட திரு தர்மேந்திர பிரதான், வளர்ச்சி அடைந்த பாரதம் எனும் நோக்கில் இந்தியாவை சக்தி வாய்ந்த பொருளாதார நாடாக மேம்படுத்த, தேசிய மற்றும் மாநில நிலையிலான அரசியல் ஸ்திரத்தன்மை மிக அவசியம் என்றும் தெரிவித்தார். டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா நிகழ்ச்சியில் பேசுகையில், ஒரே நாடு – ஒரே தேர்தல் மட்டுமே 2047 ஆம் ஆண்டு இந்தியாவை வளர்ச்சி அடைந்த பாரதமாக மாற்றுவதற்கான ஒரே மார்க்கம் என்று குறிப்பிட்டார்.

ICSE (8)

10 ஆம் வகுப்புக்கான ICSE தேர்வு முடிவுகளும், பன்னிரண்டாம் வகுப்புக்கான ISC தேர்வு முடிவுகளும் இன்று வெளியாகி உள்ளன. 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ICSE 10 ஆம் வகுப்பு தேர்வுகளையும், 99 ஆயிரத்து 551 மாணவர்கள் ISC பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளையும் எழுதினர். ICSE, 10 ஆம் வகுப்பு தேர்வுகளில் 99.37 சதவிகித மாணவிகளும், 98.84 சதவிகித மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். ISC, பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுகளில் 99.45 சதவிகித மாணவிகளும், 98.64 சதவிகித மாணவர்களும் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

அன்னதானம் (4)

மண்ணாடிப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட திருக்கனூரில் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் ஆகியோர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.